# 20 எழுத்துக்களை தன்னிச்சையாக அடையாளங்காணுதல்.

**இலக்கு**

*மாணவர்கள் ஒரே பார்வையில் எழுத்துகளையும் அசைகளையும் அடையாளங் காண்பதற்கு தமது திறனை பயிற்சி மூலம் வளர்த்துக் கொள்கின்றனர். இது படிப்பு விரைவின் அதிகரிப்பிற்கு இட்டுச்செல்கின்றது.*

1ம் - 4ம் தரம் | 10 - 15 மணித்துளிகள்

**கருவிகள்:**
குறிப்பிடத்தக்க பயிற்சிகளுக்கு உருவாக்கப்பட்ட பணித்தாள்கள். கீழே பார்க்கவும்.

**செயல்முறை:**

முதல் மொழியில் வரிவடிவ எழுத்துக்களை அடையாளங் காண்பதற்கான இலக்கு அவ்வகையான மாணவர்களில் பெரும்பாலானோர் அவர்களுடைய பள்ளி மொழியிலே தங்கியிருப்பதால் இதனை அறிந்திருப்பதில்லை. அது தன்னிச்சையாக இயன்றவரை அறியப்பட வேண்டுமென்பதுடன் அவை பல்வேறு பயிற்சிகளால் அடையலாம்.

எடுத்துக்காட்டுகள்:

- எழுத்துகளைத் திரட்டல் (பார்க்கவும் பயிற்சி (அ) தேவைக்கேற்றாற்போல் பயிற்சியை மாற்றியமைக்க முடியும்).
- எழுத்துகளை ஒன்றுபடுத்தல். தெளிவாக எழுதப்பட்ட எழுத்துகளைக் கொண்ட இரண்டு மூன்று தாள்கள் இப்பயிற்சிக்கான சிறந்த மாதிரியாகும். இக்கீலங்கள் ஒன்றுக்கொன்று அருகிலோ அல்லது ஒன்றின்மேல் ஒன்றாகவோ வைத்து எழுத்துகளின் புதிய கூட்டிணைவுகளை உருவாக்கும் விதத்தில் நகர்த்தப்படும்.
- எழுத்துகளின் கூட்டிணைவை இலகுவில் அடையாளங்காணலாம். (பார்க்கவும் பயிற்சி ஆ)
- அசைகளைத் தொகுத்தல் (மேலே ”எழுத்துகளை ஒன்றுபடுத்தல்” குறிப்பிடப்பட்டதுபோல் தாள் கீலங்களோடு கூட நன்றாக செயற்படக்கூடியது).
- வழமைக்கு மாறான வகையிலான தட்டச்சு எழுத்துகளை முகங்களை விளங்கிக்கொள்ளுதல் (இந்தப் பயிற்சிக்கு ஒரு எழுத்துருவினை வெவ்வேறு எழுத்து வடிவ வகைக்குள் ஆசிரியரால் மாற்ற முடியும்).

**குறிப்புகள்:**

- வழமையான வகுப்பறைக் கற்பித்தலில் கற்பிக்கப்படாத எழுத்து வடிவங்கள் இவ்வகையிலான பயிற்சிக்கு ஒரு குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கின்றன. அறிமுகத்தில் இயல் 01 அ வை பார்க்கவும்.
- ஒரு பங்காளியுடன் வேலைசெய்வதற்கு பல பயிற்சிகள் உகந்ததாக அமையும்.
- தேவைப்படுகின்ற பயிற்சித்தாள்கள் புது மாணவர்களுக்காக பழைய மாணவர்களால் தயாரித்து வழங்க முடியும்.
- இவ்வகையிலான பயிற்சிகள் பழைய மாணவர்களால் தமது முதல்மொழியில் எழுத்து வடிவங்களை அடையாளங் காண்பதில் பிரச்சினையை எதிர்கொண்டால் பயன்படுத்தலாம்.

## பயிற்சி அ)

**எத்தனை M எழுத்துக்களை உங்களால் இனங்காண முடியும்?**
**எல்லா P எழுத்துக்களையும் கண்டுபிடிக்க.**
**W எழுத்தில் 5ஐ விட அதிகமாகவோ குறைவாகவோ காணப்படுகின்றது?**

P T U F M W H J K F M L R W D M N P Q M Z G G O
P H W M N W S L R J L M W N D H B W B E W M W
K R Ö Ü N O Y P B M W Z K P W N L R N P E R N L G
P A M E J L K A G T H I R W L B P M T A B P W N R
M S L F J P Q X Y G I D M T K T Ü W Ä A Ä Q M O D
G F H K R O E N W M W N V C I K T L W P N E M O
U T F W G Ü N O Y P B M W Z K P W N L R N P E R
N L G P A M E J L Ü N O L R N P E N L G P A M E J L

பயிற்சி ஆ)

கீழே காணப்படும் சொற்களுள் Sch, Sp மற்றும் pf ஆகியவற்றைப் பார்க்கவும். எத்தனை Sch,Sp மற்றும் pf களைக் காண்கின்றீர்கள் என்பதை எழுதுக.

sch ◯ sp ◯ pf ◯

shipshape, witchcraft, moonlight, distinguish, knowledge, shreds, brain-storm, glimpse, scallop, embellishment, theater, goldfish, heather, splice, zenith, sniffles, ghostly, featherweight, cyclist, diminished, smooth, rather, spinach, replenish, scholastic, duckling, scientist, industrious, puppet, thimble, uncertainty, gnash, footprint, splash, opulent, thrifty, spaceman, junction, highlight, scissors, fatherland, sprightly, snowflake, otherwise, airspeed, ghoulish, scrutiny, tarnish, shade, astonish, shocking, catlike, fishpond, throughout, shrimp, jestingly, spoilsport,..).

# 21 சொற்களை மிக வேகமாகப் படித்தல்.

**இலக்கு**

*உடனடியாக இனங்காணக்கூடிய அடிக்கடி பயன்படுத்தும் சொற்களின் பிரதிமைகளின் விரிவாக்கம் மற்றும் பயிற்சி அதேபோல் விரைவாக சொற்களை அடையாளங் காணுதல், ஒவ்வொரு எழுத்தாகக் கண்டறிந்ததை நீக்குதல் (காட்சிச் சொற்கோவை) ஆகியன .இப்பயிற்சியின் நோக்கு. இது மேம்படுத்தப்பட்ட படிப்பு விரைவுக்கு இட்டுச்செல்கின்றது.*

1ம் - 4ம் தரம் | 10 - 15 மணித்துளிகள்

**கருவிகள்:**
பயிற்சிகளுக்கு முறையாக ஏற்படுத்தப்பட்ட பணித்தாள்கள். கீழே பார்க்கவும்.

**செயல்முறை:**

குறிப்பிட்ட அடிக்கடி பயன்படுத்தும் சொற்களின் பிரதிமைகளைப் பெரும்பாலும் தன்னிச்சையாக இனங்காண்பதற்கான இலக்கு வெவ்வேறான பயிற்சிகளுடன் அணுகக்கூடியது. எடுத்துக்காட்டாக,

- சிக்கலுடைய சொற்களைப் படித்தல் (கீழேயுள்ள அ பயிற்சியைப்பார்க்கவும்).
- உடனடியாக அடிக்கடி பயன்படுத்தும் குறுஞ்சொற்களை இனங்காணுதல் (கீழேயுள்ள ஆ பயிற்சியைப்பாரக்கவும்).
- தவறாகச் சீரமைக்கப்பட்ட எழுத்துக்களுடனான சொற்களைப் படித்தல் (கீழேயுள்ள இ பயிற்சியைப்பார்க்கவும்).
- அடிக்கடி பயன்படுத்தும் சொற்களுக்கான ஒத்த ஓசையுடைய சொற்களைக் கண்டுகொள்ளுதல் (காடு-வீடு-மாடு).
- செய்தித்தாள் கட்டுரை அல்லது செய்தி ஒன்றிலிருந்து எடுக்கப்பட்ட எழுத்துருவிலிருந்து அடிக்கடி பயன்படுத்தப்பட்ட சொற்களை அடையாளங்கண்டு அவற்றை வர்ணங்களால் தனித்துக் காட்டவும் (எ.டு. "அதிகமாக" அல்லது "பல", "மிகவும்", "இருக்கலாம்" அல்லது "மற்றது" இவ் எழுத்துருவில் மீண்டும் மீண்டும் அடிக்கடி பயன்படுத்தப்பட்ட சொற்கள்).
- இணைக்கும் சொற்கள்: ஒன்றாக இணையும் சொற்களின் சோடிகளைக் கொண்ட செயற்பாட்டுத்தாள் ஒன்றினை மாணவர்கள் பெறுவார்கள். ஆனால் அவை தனித்தனியாக எழுதப்பட்டதுடன் அவை சரிசெய்யப்பட வேண்டும். ஒன்றாக இணைந்த சொற்களை அம்புக்குறியால் இணைக்க வேண்டும் (எ.டு. மெக்கானிக்-குறடு, நாய்-குரைக்கும், மற்றும் பல).

**குறிப்புகள்:**

- இணையாக வேலை செய்வதற்கு பல பயிற்சிகள் சிறந்தனவாக அமையும்.
- தேவைப்படுகின்ற பணித்தாள்களில் பெரும்பாலானவற்றை புது மாணவர்களுக்காக பழைய மாணவர்களால் தயாரித்து வழங்க முடியும்.
- இவ்வகையிலான பயிற்சிகள் பழைய மாணவர்களால் தமது முதல்மொழியில் எழுத்து வடிவங்களை அடையாளங் காண்பதில் சிக்கலை எதிர்கொண்டால் பயன்படுத்தலாம்.

II